1996 பிப்ரவரி 16]

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதலமைச்சர், புனிதத் தாய், பொன்மாதா டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் தமிழகத்திலே இன்றையதினம் ஒரு மக்களாட்சி சிறப்பான முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. திருத்தணி நகரைப் பொறுத்தமட்டில் இன்றையதினம் ஒரு கடினமான குடிநீர்ப் பஞ்சத்தை எதிர்நோக்கி மக்கள் எல்லாம் குடிநீருக்காக அலைந்து கொண்டிருக்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் சுமார் 400 கோடி அளவிலே ஒரு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் உள்ளதாகச் சொன்னார்கள். அமைச்சர் பெருமகனார் அவர்கள் வருகிற ஒரு சில நாட்களில் இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவசியம் ஆவன செய்வார்களா என்கின்ற என்னுடைய கோரிக்கையை பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு விலை விவரப் பட்டியலின்படி திருத்தணி நகருக்கு குடிநீர் வழங்குகிற வகையில் சுமார் 410 இலட்சத்தில், 410 கோடியல்ல– 410 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குடிநீர்த் திட்டத்திற்காக திருத்தணி பேரூராட்சியினுடைய மன்றத் தீர்மானம் களப்பொறியாளர்களால் கேட்கப்பட்டிருக்கிறது. மன்ற தீர்மானம் திருத்தணி பேரூராட்சியிலிருந்து பெறப்பட்டவுடன் திட்ட மதிப்பீடு, வாரிய ஒப்புதல் பெறப்பட்டு, அரசு நிர்வாக ஒப்புதல் பெற்று, அரசுக்குக் கிடைக்கப் பெற்றவுடன் நிதிநிலைமைக்கு ஏற்ப இந்தத் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 37, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

37—

மாணவர் விடுதி அமைத்தல்.

*21241—*திரு. வீ. சுப்பிரமணியன் :*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், மிட்டாமண்டகப்பட்டு, சித்தலம்பட்டு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் மிட்டாமண்டகப்பட்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர்களுக்கான விடுதி ஒன்று திறக்க 1995 –96 ஆம் ஆண்டில் அரசாணை எண் (பல்வகை) 159, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 11-9-95-- ல் ஆணையிடப்பட்டு திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போடும்போது, அங்கே விடுதிகள் இல்லை. தற்போது மிட்டாமண்டகப்பட்டி கிராமத்தில் மட்டும் மாணவர், மாணவியர் ஆகியோருக்கு இரண்டு விடுதிகளைத் திறப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்களுடைய இரட்சகராகவும், கடவுளாகவும் விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, சித்தலம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நடப்பு ஆண்டிலேயே மாணவர்கள் விடுதி திறப்பதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் ஆண்டுக்காண்டு ஹாஸ்டல்களும், பில்டிங்குகளும் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் சென்ற ஆண்டு இரண்டு வேண்டும் என்ற கோரிக்கை வைத்து ஒன்று பெற்றுவிட்டார்கள். இன்னொன்று வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்வரும் நிதியாண்டில் பரிசீலிக்கலாம் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைவிட அவர் கேள்வி கேட்டு பதில் வருவதற்குள்ளே அவருக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்காகவே பாராட்ட வேண்டும்.

வினா எண் 38, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.